**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**

**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு

**2026–ம் வருடம் மார்ச் மாதம், 13–ம் நாள், வெள்ளிக்கிழமை**

ஆண்டு பட்டியல் வழக்கு எண். 3/2024

(தாய் வழக்கு எண்.139/2011)

(CNR NO: TNTJ160000112011)

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
நடுக்காவேரி காவல் நிலையம்,
கு.எண். 161/2009 ...குற்றமுறையிடுபவர்

//எதிராக//

ரவி, வயது 63/2026
க/பெ. பிச்சை
தெற்குத்தெரு, மேலதிருப்பந்துருத்தி, ...எதிரி
திருவையாறு தாலுக்கா,
தஞ்சாவூர்.
(தாய் வழக்கு சி.சி.எண்.139/2011–ல் குவிமுச பிரிவு 319–ன்கீழ் 6–வது எதிரியாக சேர்க்கப்பட்டு, 04.01.2024–ஆம் தேதிய உத்தரவின்பேரில் இந்த சிசி.எண்.3/2024–ன்கீழ் தனியாக பிரிக்கப்பட்டுள்ளார்.)

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
|---|---|---|---|---|---|
| **S.No.** | **CASE SUMMARY** | | | | |
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | **Date of Remand** | **Release on** |
| | | | Ravi | **Not Arrested. Accused added in the case as per order in petition filed u/s 319 Cr.P.C** | |
| (ii) | **The date of filing of the complaint/final report in the Court** | : | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | | 09.06.2009 | 01.11.2011 | |

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:01 +0530

<table>
<tr><td>(iii)</td><td>The date of committal of the case to the Court of Session</td><td>:</td><td colspan="4">NIL</td></tr>
<tr><td>(iv)</td><td>The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe</td><td>:</td><td colspan="4">11.03.2026</td></tr>
<tr><td rowspan="2">(v)</td><td rowspan="2">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code</td><td rowspan="2">:</td><td colspan="2">Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td colspan="2">-</td><td>-</td><td>-</td></tr>
<tr><td rowspan="5">(vi)</td><td rowspan="5">Date of examination in-chief and cross-examination of a witness</td><td rowspan="5">:</td><td colspan="2">Name of the Examination</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW1</td><td>Shanthi</td><td>14.05.2014 and 16.11.2017</td><td>16.11.2017</td></tr>
<tr><td>PW2</td><td>Geetharani</td><td>16.11.2017</td><td>16.11.2017</td></tr>
<tr><td>PW3</td><td>Thangadurai</td><td>16.06.2022</td><td>16.06.2022</td></tr>
<tr><td>PW4</td><td>Mathiyazhagan</td><td>10.01.2024</td><td>10.01.2024</td></tr>
</table>

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:07 +0530

<table>
<tr><td>(vii)</td><td>Date of examination of the accused U/Sec 313 of the Code</td><td>:</td><td colspan="3">16.12.2025</td></tr>
<tr><td>(viii)</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and</td><td>:</td><td colspan="3">Not Applicable.</td></tr>
<tr><td rowspan="2">(ix)</td><td rowspan="2">Grant of stay by superior Courts and the results thereof</td><td rowspan="2">:</td><td>Sessions Court CMP Numbers</td><td>High Court No and Date of Stay</td><td>Result</td></tr>
<tr><td colspan="3">NIL</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 1–வது குற்றச்சாட்டு | | இந்த எதிரி இதர எதிரிகளுடன் சேர்ந்து கலகம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் ஆயுதத்துடன் சட்டவிரோதமாக ஒன்றுகூடிய செயலுக்காக இதச.பிரிவு.148–ன் கீழ் |
| 2–வது குற்றச்சாட்டு | : | எதிரி புகார்தாரரை பொது இடத்தில் அசிங்கமான வார்த்தையால் திட்டி புகார்தாரருக்கு அருவருப்பு ஏற்படுத்திய செயலுக்காக இதச.பிரிவு.294(b)–ன் கீழ் |
| 3–வது குற்றச்சாட்டு | | எதிரி புகார்தாரரை அரிவாளால் வெட்டி புகார்தாரருக்கு சாதாரண காயத்தை ஏற்படுத்திய செயலுக்காக இதச.பிரிவு.324–ன் கீழ் |
| 4–வது குற்றச்சாட்டு | : | எதிரி அரிவாளைக் காட்டி புகார்தாரருக்கு கொலை மிரட்டல் விடுத்த செயலுக்காக இதச.பிரிவு.506(ii)–ன் கீழ் |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளி அல்ல. |
| நீதிபதியின் தீர்மானம் | : | எதிரி இ.த.ச.பிரிவுகள்.148, 294(b), 324, 506(ii)–ன்கீழ் குற்றவாளி என்று முடிவு. |

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:12 +0530

Date: 13.03.2026
JM Court, Thiruvaiyaru

| | | |
|---|---|---|
| உத்தரவு (அ) தண்டனை | : | எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.148, 294(b), 324, 506(ii)-ன்கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானிக்கப்பட்டு, கு.வி.மு.ச.பிரிவு. 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.<br>2). இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரங்கள் மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.<br>3). இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. |

இந்த எதிரி நீங்கலாக தாய் வழக்கு 14.09.2011-ஆம் தேதியன்று CC.139/2011 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 14.05.2014-ஆம் தேதிய மனுவின்பேரில், 6-வது எதிரியாக தாய் வழக்கில் சேர்க்கப்பட்டு, 04.01.2024-ஆம் தேதிய இந்நீதிமன்ற உத்தரவின்பேரில் இந்த எதிரிக்கு எதிரான வழக்கு மட்டும் தாய் வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு, CC.3/2024-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து, கடந்த 11.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை II திருமதி.S.சத்யா, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.சுப்ரமணியன், M.A, B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:16 +0530

## தீர்ப்புரை

எதிரிக்கு எதிராக இ.த.ச.பிரிவுகள்.148, 294(b), 324, 506(ii)–ன் கீழ் நடுக்காவேரி காவல் நிலைய உதவி ஆய்வாளரால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு குவிமுச பிரிவு 319–ன்கீழான மனுவின் உத்தரவின்பேரில், இவ்வழக்கு நடைமுறை தொடரப்பட்டுள்ளது.

**1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின்படி வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 09.06.2009–ஆம் தேதி காலை 8.00 மணிக்கு புகார்தாரர் அவரது வீட்டில் இருந்தபோது, தாய் வழக்கின் மற்ற எதிரிகள் புகார்தாரரின் வீட்டிற்கு ஆயுதங்களுடன் வந்து அசிங்கமான வார்த்தையால் திட்டி, அரிவாளால் புகார்தாரரை வெட்டி, காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து, இதச பிரிவுகள் 147, 148. 324. 294(b), 506(ii) IPC–ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக நடுக்காவேரி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அரசுதரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை, இந்த எதிரி நீங்கலாக தாய் வழக்கின் மற்ற எதிரிகளுக்கு எதிராக, இ.த.ச.பிரிவுகள்.148, 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றங்களை பொறுத்து சிசி எண்.139/2011–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குவிமுச பிரிவு 319–ன்கீழான மனுவின் 14.05.2014–ஆம் தேதிய உத்தரவின்பேரில், இந்த எதிரி தாய் வழக்கில் 6–வது எதிரியாக சேர்க்கப்பட்டு, எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச. பிரிவு.207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, விசாரணை முடிவுற்றிருந்த நிலையில், எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனையப்படவில்லை என்று கண்டறியப்பட்டு, ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது 148, 294(b), 324, 506(ii)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, குற்றச்சாட்டுக்களை எதிரிக்கு

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:20 +0530

எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்தார். அதன் பின்னர் அரசுத் தரப்பில் எவ்வித கூடுதல் சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

3. அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசுதரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்களும், குறியீடு செய்யப்பட்டன.

**4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:-**

கடந்த 09.06.2009-ம் வருடம் காலை 08.00 மணியளவில் புகார்தாரரும், புகார்தாரரின் கணவர், மகள், புகார்தாரரின் தங்கை கீதாராணி ஆகியோர் வீட்டில் இருந்தபோது இந்த எதிரியும், தாய் வழக்கின் மற்ற எதிரிகளும் தகாத வார்த்தையால் திட்டியுள்ளனர். 1-ஆம் எதிரி அரிவாளால் புகார்தாரரை நடுமண்டையில் வெட்டியதில் ரத்தம் வந்துள்ளது. இந்த எதிரி ரவி புகார்தாரரை கொலை செய்துவிடுவதாக மிரட்டியுள்ளார். புகார்தாரரின் தங்கை கீதாராணி மற்றும் அவரது கணவர் ஆகியோரை கட்டையாலும், குச்சியாலும் அடித்துள்ளார்கள். சிகிச்சைக்காக TMCH மருத்துவமனையில் புகார்தாரர் சேர்க்கப்பட்டு, புகார் மனு அ.சா.ஆ.1 கொடுத்துள்ளார்.

கடந்த 09.06.2009-ஆம் தேதி காலை 10.00 மணிக்கு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தராஜன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது, புகார்தாரர் அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1-ஐ பெற்று நிலைய குற்ற எண்.161/2009 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b),323, 324, 506(ii) IPCன் கீழ் முதல் தகவல் அறிக்கை-அ.சா.ஆ.2 பதிவு செய்து, சம்பவ இடம் சென்று, சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ சாட்சிகள் கணபதி மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர்-அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம்-அ.சா.ஆ.3 தயார் செய்து, சாட்சிகள் 1 முதல் 4 வரையிலான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் பாலசுப்பிரமணியன்,



AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:24 +0530

மைதிலி, காந்தி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று முறையே அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6 பெற்றுள்ளார். இத்துடன் விசாரணையை முடித்து 02.09.2011–ஆம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(ii)–இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்

5. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)–ன் கீழ் எதிரியிடம் வினவியபோது, எதிரி அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினார்கள். எதிரியின் பதில் பதிவு செய்யப்பட்டன. எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறினபோதும், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

(i) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii)–ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பதேயாகும்.

**7. தீர்வு:–**

கடந்த 09.06.2009ஆம் தேதி காலை 8.00 மணிக்கு புகார்தாரர் அவரது வீட்டில் இருந்தபோது, இந்த எதிரியுடன் தாய் வழக்கின் மற்ற எதிரிகள் புகார்தாரரின் வீட்டிற்கு ஆயுதங்களுடன் வந்து அசிங்கமான வார்த்தையால் திட்டி, அரிவாளால் புகார்தாரரை வெட்டி, காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இந்த எதிரி நீங்கலாக,

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:29 +0530

இதர எதிரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இந்த எதிரி மனுவின்பேரில் வழக்கில் சேர்க்கப்பட்ட இதச பிரிவு 319–ன்கீழான மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில், இந்த எதிரி வழக்கில் 6–வது எதிரியாக சேர்க்கப்பட்டு, இதச பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii)–ன்கீழ் நீதிமன்றத்தால் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

வழக்கு சம்பவம் 09.06.2009–ஆம் தேதி காலை 8.00 மணி முதல் நடந்ததாக சொல்லப்பட்டு, அன்றையதினமே காலை 10.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அன்றையதினமே மாலை 3.00 முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை 01.09.2011–ஆம் தேதி முடிவுற்று, குற்ற இறுதி அறிக்கை 29.09.2011–ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புகார்தாரர் கொடுத்த அ.சா.ஆ.1–புகார் மனுவில், இந்த எதிரியும், இதர 5 எதிரிகளும் சேர்ந்து ஆயுதங்களுடன் வந்து புகார்தாரரின் வீட்டின் முன்பு நின்று அசிங்கமாக திட்டி, புகார்தாரரை அரிவாளால் தலையில் வெட்டி, புகார்தாரரின் தங்கை மற்றும் அவரது கணவரை தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. தாய் வழக்கான சிசிஎண்.139/2011–ல் இந்த எதிரி சேர்க்கப்படுவதற்கு முன்னர், 14.05.2014 அன்று புகார்தாரர்–அ.சா.1–ஆக அளித்துள்ள சாட்சியத்தில், இந்த எதிரி புகார்தாரரை அரிவாளால் தலையில் வெட்டியதாகவும், அசிங்கமாக பேசியும், கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாகவும், தனது தங்கை கீதா ராணியை கட்டை மற்றும் குச்சியால் அடித்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி தேதியிலேயே அ.சா.1–ன் முதல் விசாரணை முடிந்த பிறகு இதச பிரிவு 319–ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, Crl.M.P.No:2850/2014–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 12.04.2016–ஆம் தேதி அனுமதிக்கப்பட்டு, தாய் வழக்கில் 6–வது எதிரியாக இந்த எதிரி சேர்க்கப்பட்டுள்ளார். அதன் பிறகு மீண்டும் அ.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் சாட்சியம் அளித்தபோது, இந்த எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக எந்த

சாட்சியமும் அளிக்கவில்லை. குறுக்கு விசாரணையின் போது, எந்தெந்த எதிரி, என்னென்ன ஆயுதங்கள் எடுத்து வந்து வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டனர் என்று குறிப்பாக சொல்லியுள்ள அ.சா.1, இந்த எதிரி சம்பவ இடத்தில் இருந்ததாகவோ, சம்பவத்தில் ஈடுபட்டதாகவோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

சம்பவத்தில் காயம்பட்ட நபராக சொல்லப்பட்ட புகார்தாரரின் தங்கை அ.சா.2–கீதா ராணியும், தனது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தில், இந்த எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாகவோ, தன்னை தாக்கியதாகவோ, எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. புகார்தாரரின் கணவர்– அ.சா.3 தனது சாட்சியத்தில், இந்த வழக்கின் எதிரி தன்னை அசிங்கமான வார்த்தையால் திட்டி, தன்னையும், தனது மனைவி, மகள் மற்றும் மனைவியின் தங்கை கீதா ராணியையும் கையால் அடித்ததாக முதல் விசாரணை சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1, 2 சாட்சிகளே எதிரி தங்களை தாக்கியதாக சாட்சியம் அளிக்காத நிலையில், எதிரி, அ.சா.1, 2–ஐ தாக்கியதாக அளித்துள்ள சாட்சியம் ஏற்கக்கூடியதாக இல்லை. மேலும், அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில், இந்த எதிரிக்கும், தனக்கும் நீண்டகாலமாக பிரச்சனை உள்ளது என்றும், ஏற்கனவே எதிரிக்கு எதிராக அ.சா.3–ன் மகளை எதிரி தாக்கியதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். அந்த வழக்கின் முடிவு தனக்குத் தெரியாது என்று அவர் அளித்துள்ள சாட்சியம், இந்நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. தனது மகளை தாக்கியதாக அ.சா.3 சொல்லியுள்ளதில், அது குறித்து புகார் வாக்குமூலத்திலோ, வழக்கு ஆவணங்களிலோ, அ.சா.1, 2–ன் சாட்சியத்திலோ சொல்லப்படவில்லை. அவர் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. தன்னை தாக்கியதாக அ.சா.3 சாட்சியம் அளித்துள்ள நிலையில், தான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று அவர் குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

எனவே இந்த எதிரி தாய் வழக்கின் மற்ற எதிரிகளுடக் சேர்ந்து கலகம்

செய்யும் நோக்கத்தில், புகார்தாரரின் வீட்டிற்கு வந்து, அசிங்கமாக திட்டி, அரிவாளால் வெட்டி, கொலை மிரட்டல் விடுத்தார் என்ற இதச பிரிவு 148, 294(b), 324, 506(ii)—ன்கீழான குற்ற சம்பவம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இந்த எதிரி முதல் தகவல் அறிக்கையில் 2—வது எதிரியாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில், இந்த எதிரியை வழக்கில் இருந்து நீக்கி உள்ளது தொடர்பாக எதிரி நீக்கல் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அது குறித்து வழக்கு கோப்பில் அரசு தரப்பில் சொல்லப்படவில்லை. தரப்பினர்களுக்கிடையே உள்ள முன் வழக்குகள், முன் விரோதங்கள் குறித்து வழக்கு கோப்பில் சொல்லப்படவில்லை. எனவே, இவ்வழக்கு உரிய முறையில் புலன் விசாரணை செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டை பொறுத்தவரையில், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, மேற்கண்ட சந்தேகங்களின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி இ.த.ச. பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii)—ன்கீழ் குற்றவாளி அல்ல என்று கு.வி.மு.ச.பிரிவு.248(1)—ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரி விடுதலை செய்யப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இந்த எதிரியால் வழக்கு சம்பவத்தில் புகார்தாரர் மற்றும் சாட்சிக்கு காயம் ஏற்பட்டதாக நிரூபிக்கப்படாததால் அவர்களுக்கான இழப்பீடு பொறுத்து உத்தரவு எதுவும் பிறப்பிக்க வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>8. முடிவாக,</u>

**1. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii)—ன் கீழான குற்றச்சாட்டு, அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி**

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:45 +0530

**நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி அல்ல என்று, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்யப்படுகிறது.**

**3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.**

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு **மார்ச்** மாதம் 13–ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:52 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**அரசுத்தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | சாந்தி (புகார்தாரர்) |
| அ.சா.2 | கீதாராணி |
| அ.சா.3 | தங்கதுரை |
| அ.சா.4 | மதியழகன் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 09.06.2009 | புகார் மனு– அசல் |
| அ.சா.ஆ.2 | 09.06.2009 | முதல் தகவல் அறிக்கை – அசல் |
| அ.சா.ஆ.3 | 09.06.2009 | மாதிரி வரைபடம் – அசல் |

| | | |
|---|---|---|
| **அ.சா.ஆ.4** | 09.06.2009 | பார்வை மகசர் – அசல் |
| **அ.சா.ஆ.5** | 09.06.2009 | அ.சா.1–ன் விபத்து பதிவேடு – அசல் |
| **அ.சா.ஆ.6** | 09.06.2009 | அ.சா.1–ன் காயச்சான்று – அசல் |

**<u>அரசுத் தரப்பு சான்று பொருள்கள்</u>: இல்லை.**

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>–** இல்லை.

**<u>சான்றுப் பொருட்கள்:</u>–**இல்லை.

**<u>குறிப்பு:–</u>**

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.13 20:37:59 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.